**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2025 ஆம் வருடம் ஏப்ரல் திங்கள் 15 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.1/2024 இன் அ.வ.எண்.227/2016**

P.தனபாக்கியம் ... மனுதாரர்/2–ம் பிரதிவாதி

/ எதிர் /

1. L.பாலசுப்பிரமணியம் ... எதிர்மனுதாரர்/வாதி

2. S.துரைசாமி
3. N.தங்கவேல்
4. A.ராமலிங்கம் ... எதிர்மனுதாரர்கள்/ 1, 3 மற்றும் 4 பிரதிவாதிகள்

இம்மனுவானது, கடந்த 03.04.2025 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/2–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.கணேஷ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் திரு.E.N.துரை அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மகாதேவன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/3–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.செங்குட்டுவன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/4–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சுந்தரராஜ் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

**ஆணையுரை**

மனுதாரர்/2–ம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்ககோரி உரிமையில் நடைமுறைச்சட்டம் கட்டளை 8, விதி 9 மற்றும் பிரிவு 151–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தரப்பில்,** இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 2-ம் பிரதிவாதி ஆவார். மனுதாரர்/2-ம் பிரதிவாதியும், மனுதாரரின் கணவரின் சகோதரரான 1-ம் பிரதிவாதியும் சேர்ந்து அசல் வழக்கில் ஏற்கனவே கூட்டாக எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தனர். அந்த சமயத்தில் 1-ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிருரை சங்கதிகளை படித்துப்பார்க்காமலேயே மனுதாரர்/2-ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் கையெழுத்திட்டுவிட்டார். தற்போதுதான் அதில் சரியான சங்கதிகள் இல்லை என்பது குறித்து மனுதாரருக்கு தெரியவந்தது. எதிர்வழக்குரை சங்கதிகள், வழக்கு பி அட்டவணை சொத்தான வண்டித்தடத்தில் மனுதாரருக்கு உள்ள உரிமையை தருவதற்கு வாதிக்கும், 1-ம் பிரதிவாதிக்கும் விருப்பம் இல்லை என்பதை காட்டுகிறது. வாதி மற்றும் மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து மனுதாரர் பி அட்டவணையான வண்டித்தடத்தை உபயோகித்து வாகனங்களை கொண்டு சென்று வருகிறார். எனவே, மனுதாரருக்கு வண்டித்தடத்தின் மீது உள்ள உரிமையை நிரூபிக்க கூடுதல் எதிருரை தாக்கல் செய்யவேண்டியது அவசியமாக உள்ளது. எனவே, கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 2-ம் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி தரப்பில்,** மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எவ்வகையிலும் நிலைக்கத்தக்கதல்ல. 2-ம் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் 2-ம் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதியுடன் சேர்ந்து வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்துள்ளார். படித்துப்பார்க்காமல் 2-ம் எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டதன் பேரில் கையெழுத்து செய்தததாக சொல்வது சரியல்ல, படித்துப்பார்த்துத்தான் கையெழுத்து செய்தார். 2-ம் எதிர்மனுதாரரும், மனுதாரரும் சேர்ந்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள நிலையில், மனுதாரர்

மட்டும் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளது போலவும், பி அட்டவணை வண்டிப்பாதையில் மனுதாரருக்கு உரிமை வழங்கும் எண்ணம் இல்லை என்று சொல்வதும் சரியல்ல. கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய கட்டளை 8, விதி 9–ன் கீழ் மனு தாக்கல் செய்துவிட்டு, மனுவுடன் புதிதாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளும்படி இல்லை. எனவே, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4)** 1, 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

**5)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**6)** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**7)** **<u>பிரச்சனை</u>**

மனுதாரர்/2–ம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்ககோரி உரிமையில் நடைமுறைச்சட்டம் கட்டளை 8, விதி 9 மற்றும் பிரிவு 151–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.2)** மனுதாரரும், 1–ம் பிரதிவாதியும் கூட்டாக தாக்கல் செய்திருந்த எதிர்வழக்குரையில், படித்துப்பார்க்காமல் கையெழுத்திட்டுவிட்டதாகவும், அந்த எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகள் மனுதாரருக்கு பி அட்டவணை வண்டித்தடத்தில் உள்ள உரிமையை வழங்க விருப்பம் இல்லை என்பதை காட்டுவதாகவும், எனவே, கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.3)** மனுதாரர் எதிர்வழக்குரை சங்கதிகளை படித்துப்பார்த்துத்தான் கையெழுத்திட்டு, நீதிமன்றத்தில் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றும், பி அட்டவணை சொத்தான வண்டித்தடத்தில்

மனுதாரருக்கு உரிமை வழங்க விருப்பம் இல்லை என்பதை எதிர்வழக்குரை காட்டுவதாக சொல்வது தவறு என்றும், எனவே, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.4)** இம்மனுதாரர் அசல் வழக்கில் 2–ம் பிரதிவாதி ஆவார். இம்மனுதாரரும், 1–ம் பிரதிவாதியும் சேர்ந்து, எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள். இந்நிலையில், எதிருரையை படித்துப்பார்க்காமல் தான் கையெழுத்து செய்துவிட்டதாக மனுதாரர் கூறும் காரணம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லை. 1–ம் பிரதிவாதியுடன் சேர்ந்து வழக்கறிஞரை நியமித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னிட்டு மனுதாரர்/2–ம் பிரதிவாதி தரப்பில் புதிதாக வழக்கறிஞர் நியமிக்கப்பட்டு, தனியாக வக்காலத்து தாக்கல் செய்துள்ளார். மனுதாரரும், 1–ம் பிரதிவாதியும் சேர்ந்து தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், 1–ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு வண்டித்தடத்தில் உரிமை இல்லை என்று குறிப்பாக மறுக்கவில்லை. ஆனால், வழக்கில் வண்டித்தடத்தின் அகலம் அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதாக எதிர்வாதம் வைக்கப்பட்டுள்ளது.

**7.5)** தற்போது மனுதாரரும் வழக்கு வண்டித்தடத்தை பயன்படுத்திவருவதாகவும், அதில் தனக்கு உரிமையுள்ளது என்ற தனது எதிர்வாதத்தை நிரூபிக்கும் பொருட்டு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவேண்டும் என்று மனுதாரர் கூறியுள்ளார். இவ்வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக நிலுவையில் இருந்து வந்த நிலையில், மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் கூடுதல் எதிர்வழக்குரையை கோப்பிற்கு ஏற்பதால் வழக்கின் தன்மை எதுவும் மாறுபடாது. மேலும், புதிதாக எழுவினாவும் வனைய வேண்டிய அவசியம் இல்லை. இவ்வழக்கை பொறுத்தவரை இந்நீதிமன்றமே முதற்கட்ட விசாரணை நீதிமன்றம் ஆகும். எனவே, மனுதாரர் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு வாய்ப்பு கொடுத்து, அதன் பிறகு

இவ்வழக்கில் கண்ட பிரச்சனையை முடிவு செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரை கோப்பிற்கு ஏற்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில், என்னால் அவையறிய பகரப்பட்டது.

**ஒப்பம்/– (N. பாரதிராஜன்)**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

– இல்லை. –

**ஒப்பம்/– (N. பாரதிராஜன்)**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

-----------------------------------

**அசல் / வரைவு ஆணையுரை**

இ.ம.எண்.1/2024 இன்

அ.வ.எண்.227/2016

நாள் : 15.04.2025

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-----------------------------------